

23.11.2026 செய்திகள்

புதைபடிம எரிபொருள் விவகார முரண்பாடு : ஒப்பந்தமின்றி முடிந்த ஐ.நா.பருவநிலை மாநாடு

- துருக்கி – ஆஸ்திரேலியா இணைத் தலைமையேற்று நடத்திய இந்த மாநாடு துருக்கியின் அன்டாலியா நகரில் நடைபெற்றது.
- பருவநிலை மாற்றத்தால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை எதிர்கொள்வது, புதைபடிம எரிபொருளுக்கு மாற்றான பிற முன்னெடுப்புகளை மேற்கொள்வது உள்ளிட்ட பருவநிலை சார்ந்த நடவடிக்கைகள் தொடர்பான பேச்சு வார்த்தைகள் நடத்தும் முக்கியத்துவம் வாய்ந்ததாக ஐ.நா.பருவநிலை உச்சி மாநாடு விளங்குகிறது.
- ஆண்டுதோறும் நடைபெறும் இந்த மாநாட்டில் முன்மொழியப்படும் விவகாரங்கள் உறுப்பு நாடுகளால் ஒருமித்த நிலைப்பாடுடன் ஏற்றுக்கொள்வது வழக்கம்.
- ஆனால், புவி வெப்பமடைவதற்கு முக்கியக் காரணமாக விளங்கும் புதைபடிம எரிபொருள் குறித்த தகவல்களின்றி பருவநிலை உச்சிமாநாடு 31-இன் இறுதி முன்மொழிவை துருக்கி-ஆஸ்திரேலியா இணைந்து வெளியிட்டதாகக் கூறி, அதை 27 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஐரோப்பிய யூனியன் மற்றும் மேலும் சில நாடுகள் ஏற்க மறுத்துவிட்டன.
- இறுதி முன்மொழிவு ஆவணத்தில் புதைபடிம எரிபொருள்கள் குறித்த தகவல்கள் இடம்பெறக்கூடாது என ரஷியாவும், சவூதி அரேபியாவும் அளித்த அழுத்தத்தால் துருக்கி-ஆஸ்திரேலியா அதைக் குறிப்பிடவில்லை.
- இதனால் இந்த மாநாடு முக்கிய ஒப்பந்தங்கள் ஏதுமின்றி நிறைவடைந்தது.
- இந்தியா கருத்து : ஐ.நா. பருவநிலை உச்சிமாநாடு-31 பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது குறித்து மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ் எக்ஸ் வலைதளத்தில் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட பதிவில், நிகழாண்டு நடைபெற்ற மாநாட்டில் எங்களது கோரிக்கைகளை நிறைவேற்ற இறுதிவரை முயன்றோம்.
- பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான முன்னெடுப்புகளை அறிமுகப்படுத்துவதோடு அதை அமல்படுத்துவதே மிகவும் அவசியமானது.
- பருவநிலை மாற்ற பாதிப்புகளைக் கட்டுப்படுத்த தேசிய அளவிலான இலக்குகளை நிர்ணயிக்கும் வளரும் நாடுகளுக்கு தொழில்நுட்ப மற்றும் நிதியுதவிகள் நிச்சயம் வழங்கப்பட வேண்டும்.
- ஐ.நா.பருவநிலை உச்சிமாநாடு -31 இறுதி ஒப்பந்தமின்றி நிறைவு பெற்றதால் இந்தியாவின் நடவடிக்கைகளில் தொய்வு ஏற்படாது.
- 170 ஜிகாவாட்டுக்கும் மேலான சூரிய ஆற்றலுடன் தனித்திறனுடன் இயங்கும் இந்தியா, அடுத்த ஆண்டு நடைபெறும் ம ாநாட்டில் அனைத்து உறுப்பு நாடுகளிடையே ஒத்துழைப்பை வலுப்படுத்த உறுதிபூண்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தியா-ஐரோப்பிய யூனியன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம்

- இந்தியா மற்றும் 27 நாடுகளின் கூட்டமைப்பான ஐரோப்பிய யூனியன் இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையொப்பமாக இருப்பதாக மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

» இந்தியாவுக்கு என்னென்ன நன்மைகள்?

- அனைத்து ஒப்பந்தங்களின் தாய் என்று வர்ணிக்கப்படும் இந்த தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தின்படி, இந்தியாவிலிருந்து ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும்பொருள்களில் 93 சதவீதம் அளவுக்கு சுங்கவரி இருக்காது.
- ஐரோப்பிய யூனியன் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சொகுசு கார்கள், ஒயின் விலை குறையும்.
- இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு ஐரோப்பிய சந்தையில் அதிக வாய்ப்புகள் கிடைக்கும்.
- சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாக மேலாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு இந்த ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ளது.
- இந்த ஒப்பந்தத்தின் மூலம் உலகின் நான்காவது பெரிய பொருளாதார நாடான இந்தியாவும், உலகின் இரண்டாவது பெரிய பொருளாதாரக் கூட்டமைப்பான ஐரோப்பிய யூனியனும் இணைந்து சுமார் 200 கோடி மக்களைக் கொண்ட மிகப் பெரிய சந்தையை உருவாக்க உள்ளது.

மணிப்பூரிலிருந்து சோமாலியா வரை ஓய்வின்றி 4 நாட்களில் 5,700 கி.மீ. பறந்த அமூர் வல்லூறு பறவை

- அமூர் வல்லூறு பறவை உலகிலேயே மிக நீண்ட தூரம் கடல் கடந்து வலசை போதும் பறவை. 150 கிராம் எடை கொண்டது.
- இப்பறவைகள் ஆண்டுதோறும், கிழக்கு ரஷ்யா, வடகிழக்கு சீனா மற்றும் மங்கோலியாவின் இனப்பெருக்கப் பகுதிகளிலிருந்து தெற்கு மற்றும் கிழக்கு ஆப்பிரிக்க குளிர்காலத் தங்குமிடங்களுக்குப் பயணிக்கின்றன.
- இப்பயணம் வடகிழக்கு இந்தியா வழியாகச் செல்கிறது. அரிதாக தமிழ்நாட்டின் ராஜபாளையம், கோடியக்கரை பகுதிகளிலும் தென்படுவதுண்டு.
- இப்பயணத்தில் மிகவும் சவாலான பகுதி அரபிக்கடலைக் கடப்பது. இதற்காக அவை இந்தியாவின் மணிப்பூர் மற்றும் நாகாலாந்தில் பல நாட்கள் தங்கி கரையான், தட்டான் உள்ளிட்ட பூச்சிகளை உண்டு, ஆற்றலை சேமித்து வைத்துக் கொள்கின்றன.
- இப்பறவைகளை ஆராய, இந்திய வனவிலங்கு நிறுவனம், மணிப்பூர் அமூர் வல்லூறு கண்காணிப்புத் திட்டத்தை மேற்கொள்கிறது.

» 101 மணி நேரத்தில்...

- அதன்படி ஆலங் (பெண்), அபபாங் (ஆண்) என்ற 2 அமூர் வல்லூறுகளின் மீது இலகுரக செயற்கைக்கோள் டிரான்ஸ்மிட்டர்களை ஆய்வாளர்கள் பொருத்தினர்.
- ஆலங் 101 மணி நேரத்தில், 5,700 கிலோ மீட்டர் தூரத்துக்கு ஓய்வின்றி பறந்து, சோமாலியாவை அடைந்துள்ளது.
- அப்பாங், 95 மணி நேரத்தில் 4,100 கிலோமீட்டர் தூரத்தைக் கடந்து, இன்னமும் அரபிக்கடலுக்கு மேலே பறந்து கொண்டிருப்பதாக ஆய்வாளர்கள் கூறினர்.